**குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு**

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனத்திற்கு அவசியமாக உள்ளது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை** | **இணங்காமை** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நி.பி. 1646 | ஒதுக்கீட்டு வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்படும் பொழிப்பு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 1645 (அ) பந்தி | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் வாகன சம்பவக்குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | சம்பவக்குறிப்பு புத்தகங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதென தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நி.பி. 315 நி.பி. 880 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தி | சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பிணை வைப்பை மேற்கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அதிகாரசபையில் காசாளர் (shroff) நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை என்றும், காசோலை மூலம் கொடுக்கல்வாங்கல்கள் செய்யப்படுவதால், பிணை வைப்பு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ | அமைச்சிடம் இருந்து அதிகாரசபையால் பெறப்பட்டிருந்த இரண்டு ஜீப் வண்டிகள் சுற்றறிக்கையின் | இரண்டு வாகனங்களும் எதிர்காலத்தில் கையகப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 2(i) ஆம் பந்தி | பிரகாரம் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2018 இன் 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு | சட்டத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த செயலாற்றல் அறிக்கையை நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | இது சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 567,799 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,265,483 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,833,282 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் பெறுவனவுகள் ரூபா 4,706,480 அதிகரித்தமை, ஏனைய வருமானம் ரூபா 1,837,741 அதிகரித்தமை மற்றும் நுகர்வு மற்றும் பராமரிப்பு செலவினங்கள் ரூபா 1,381,721 குறைவடைந்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் 29வது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட பாதுகாப்பு நிதியத்திற்கு முறையே மீளாய்வாண்டில் ரூபா 2,100,600 மற்றும் மற்றும் முன்னைய ஆண்டில் ரூபா 1,252,648 தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன் சட்டத்தின் 29(4) ஆம் பிரிவின் பிரகாரம் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான செலவினங்களாக மீளாய்வாண்டில் முறையே ரூபா 60,456 நான்கு நபர்களுக்கும் ரூபா 6,431 இருவருக்கும் செலுத்தப்பட்டிருந்தது. குறித்த சட்டத்தின் 29(4) ஆம் பிரிவின் பிரகாரம் செலுத்தப்படும் இழப்பீடு பாதுகாப்பு நிதியத்தின் முக்கிய செலவீனமாக கருதப்படுவதாலும், சட்டத்தின் 2(இ) பிரிவின் பிரகாரம் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களிற்கு எதிராக தவறுசெய்தவர்களால் | தற்போது இந்த நிதியத்தில் இருந்து நீதிமன்ற கட்டளைகளின் பிரகாரம் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களிற்கு இழப்பீடு வழங்கப்படுகின்ற போதிலும் நேரடி இழப்பீடு வழங்குவதற்கான வழிகாட்டல்களை அதிகாரசபை வெளியிட்டிருக்கவில்லை. மேலும், பாராளுமன்றத்தில் புதிய சட்டத்தின் அங்கீகாரத்திற்குப் பின்னர் பணிகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. | வருமான சேகரிப்பு மற்றும் இழப்பீட்டு கொடுப்பனவு முறைமை சரியாக அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பாதிக்கப்பட்டவர்களிற்கு இழப்பீடு வழங்குவதுதான் அதிகாரசபையின் நோக்கம் என்பதாலும் மேற்படி வருமானத்தை சேகரித்தல் மற்றும் இழப்பீடு கணிசமாகக் குறைவடைவதால் வருமான சேகரிப்பு மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவு முறைமை சரியாக நிறைவேற்றப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | சட்டத்தின் 13(1)(ஊ) உபபிரிவின் பிரகாரம் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் மூலம் நிறுவப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் நிதியத்திலிருந்து இழப்பீடு வழங்குவதற்கான திட்டமொன்று வடிவமைக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, அமுல்ப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து 7 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த நிதியத்தில் ரூபா 16,274,850 மீதியொன்று இருந்தது. | இந்தச் சட்டத்தின் பிரகாரம் இழப்பீடு வழங்குவதற்கான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் முகாமைத்துவம் நீண்ட காலமாக கலந்துரையாடி தற்போது இந்த சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டமூலமொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இழப்பீட்டுக் கொடுப்பனவு தொடர்பான விடயம் அந்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் புதிய சட்டத்தின் அங்கீகாரத்திற்கு பின்னர் இறுதி வழிகாட்டல்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவ சபை அறிவுறுத்தல்களை வழங்கியிருந்ததென தெரிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் அமுல்ப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 3,300,000 பெறுமதியான 04 பணிகள் தொடர்பாக எந்தப் பணியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் போதான மூலதனச் செலவினங்களுக்கான நிதி ஏற்பாடு தொடர்பான திறைசேரி அறிவுறுத்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகளால் விதிக்கப்பட்ட சில செலவினக் கட்டுப்பாடுகள் காரணமாக இந்த மூலதனச் செலவினத்திற்கான மதிப்பீட்டின் கீழ் அதிகாரசபையின் தரவு முறைமையை தயாரிக்கும் பணி நீக்கப்பட்டு ஏனைய அத்தியாவசிய நடவடிக்கைகளுக்கான மூலதனச் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | நிறுவனத்தின் விரும்பிய நோக்கங்களை அடையும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 27 இல் வஸ்கடுவ பகுதியில் பாதுகாப்பு இல்லத்தை நடாத்துவதற்காக கட்டிடத்துடன் கூடிய காணியொன்று ரூபா 20,799,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காக எனது இலக்கம் பீடி/சீபீபி/01/01/04-2022 மற்றும் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையில் பொதுச் செலவினக் கட்டுப்பாட்டிற்காக கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் இருந்த போதிலும் மீளாய்வாண்டில் பாதுகாப்பு இல்லத்திற்கான தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,084,977 தொகை மற்றும் மின்சாரத்திற்காக ரூபா 7,339 தொகை செலவிடப்பட்டிருந்தது, ஆனால் பாதுகாப்பு இல்லம் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தது. | பாதுகாப்பு இல்லத்திற்கு அத்தியாவசியமான தளபாடங்களை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 697,777 தொகையும் பாதுகாப்பு இல்லத்தின் யன்னல்களில் கிறில் பொருத்துவதற்காக ரூபா 387,200 தொகையுமாக ரூபா 1,084,977 கூட்டுமொத்த தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக மின்சாரம் மற்றும் தொலைபேசிக்காக ரூபா 7,339 தொகையும் செலவிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த பாதுகாப்பு இல்லத்தைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்ய முடியாததால் (அரசாங்கத்தால் புதிய ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டதால்) பட்டியலிட்டவாறு பணியைத் தொடங்க முடியவில்லை என தெரிவிக்கப்பட்டது. | பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்து பாதுகாப்பு இல்லம் விரைவில் தொடங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 56 ஆக இருந்ததுடன் அத் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் 34 ஆகவும் இருந்ததால் 18 வெற்றிடங்கள் காணப்பட்டன. | 2021 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய நிதி அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் கீழ் அனைத்து ஆட்சேர்ப்புக்களும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதால் வெற்றிடத்தை நிரப்ப முடியவில்லை என தெரிவிக்கப்பட்டது. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) அதிகாரசபைக்கு சொந்தமான பாதுகாப்பு இல்லத்திற்கு ஒரு பராமரிப்பு உத்தியோகத்தர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக எந்தவொரு உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க சேவை ஆட்சேர்ப்புக்காக பிரதமர் செயலகத்தின் விசேட குழுவொன்றின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஊடாக அனுப்பப்பட்ட போதிலும் ஆட்சேர்ப்புக்கான அங்கீகாரம் இதுவரை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஒரு பராமரிப்பு உத்தியோகத்தரை விரைவில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |